பக்கங்கள் நான்கு Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடல்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 27 புதன்கிழமை (13 10 1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 319

# 'யாழ்தேவி' நடவடிக்கையின் போது அரசு-ராணுவ உயர்பீடம் பிணக்கு

## அதனைத் தொடர்ந்தே கிளாலி படை வாபஸ்

கொழும்பு ஒக்டோபர் 13

"யாழ்தேவி" இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து அரசு உயர்பீடத்துக்கும் இராணுவத் தலைமைப் பீடத்துக்கும் இடையே பிணக்கு நிலை ஏற்பட்டது. அதைத் தொடர்ந்தே கிளாலி வரை முன்னேறிய இராணுவம் ஆனையிறவுக்குத் திரும்பியது.

கொழும்பு செய்தி நிருபர் ஒன்று இத்தகவலை வெளியிட்டது. இதுகுறித்து அந்நிருபர் தெரிவித்ததாவது: இந்த இராணுவ நடவடிக்கை ஏன் ஆரம்பிக்கப்பட்டது? நாட்டு மக்களும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவில் சேரும் எண்ணம் காமினி கைவிட்டு விட்டார்

கொழும்பு, ஒக். 13

ஐக்கிய தேசியக் கட்சியில் சேருவதற்கு விடாது முயற்சித்து வந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்கா தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து காமினி திஸநாயக்காவும், ஜி. எம். பிரேமச்சந்திராவும் கடந்த வியாழக்கிழமை சந்திரிகா கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்காவை அவரது ரோஸ்மீட் வாசஸ்தலத்தில் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினார்கள் என "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது.

இரவு 8.15 மணிமுதல் 9.30 மணி வரை நடந்த அப்பேச்சுகளின் போது, மாகாண சபைகளின் போது மக்கள் முன்னணியை ஆதரிக்கப்போவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் உறுதியளித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர காமினி தீவிர முயற்சி எடுத்துக் கொண்டது குறித்து அப்போது இரு தரப்பினரும் ஒருவார்த்தைகூட பேசவில்லை என்றும் கூறப்படுகிறது.

## காமினியை சேர்க்கும்படி ஐ.தே.கவுக்குள் வற்புறுத்தல்

மேல்மாகாண சபையை அடுத்து தென்மாகாண சபையையும் வடமேல் மாகாண சபையையும் எதிர்க்கட்சிகளின் கைகளுக்கு விட்டுக் கொடுப்பது அடுத்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்விக்கே வழிகோலும் என்று சம்பந்தப்பட்ட மாகாண சபைகளில் அங்கம் வகிக்கும் ஐ. தே. க. உறுப்பினர்கள் தமது கட்சித் தலைமைப்பீடத்துக்கு தெரிவித்துள்ளனர்.

இந்த அபாயத்தில் இருந்து கட்சியைக் காப்பாற்ற உடனடியாக காமினியையும் பிரேமச்சந்திராவையும் ஐ.தே.கவில் இணைத்து தேசியப் பட்டியல் மூலம் அவர்களை எம். பிக்களாக்குவதுடன் அவர்களுக்கு அமைச்சர் பதவிகளையும் வழங்கவேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

இதன் மூலம் மேற்படி இரு சபைகளிலும் ஸ்ரீ ல சு க.—ஜ. ஐ. தே. மு. கட்டை கூட்டத்து ஆட்சிகளை மீண்டும் ஐ.தே.கவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(உ-எ-3)

## இராணுவத்தினருக்கு மேலும் பல சலுகைகள்!

### ஸ்ரீலங்கா அரசு வழங்குகிறது

கொழும்பு, ஒக். 13

இலங்கை இராணுவத்திலிருந்து படையினர் தப்பியோடுவதைத் தடுக்கும் நோக்குடன் இராணுவத்தினருக்குப் புதிய சலுகைகளை அரசாங்கம் வழங்கியுள்ளது.

அதிகரித்துவரும் இராணுவ இழப்புக்களால் படையினரின் உறவினர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியைத் தடுப்பதும்—

புதிதாகப் பலரைப் படையில் சேரவைப்பதும் புதிய சலுகைகள் வழங்கப்பட்டதற்கான நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய சலுகைகளின்படி—

ஒருவர் இராணுவத்தில் சேர்ந்த உடனேயே இதர சலுகைகளுடன் காப்புறுதித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். அத்துடன் அவர் இறந்தால் ஒன்றரை லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படும், ஓய்வூதியம் பெறும் காலம் வரை அவரது முழுச் சம்பளமும் குடும்பத்தினருக்கு வழங்கப்படும்.

திருமணமான ஒருவர் இறந்தால் ஒன்றரை லட்சம் ரூபாவும், திருமணமாகாதவர் இறந்தால் 75 ஆயிரம் ரூபாவும் காப்புறுதிப் பணமாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அச்சுவேலியில் 5 படையினர் பலி

கொழும்பு, ஒக். 13

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற சமயம் பலாலி முகாமில் இருந்து வெளியேறிய படையினர் அச்சுவேலியை நோக்கி முன்னேற முயற்சித்த போது விடுதலைப் புலிகள் நடத்திய எதிர்த்தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர் என்று "சண்டே ரைம்ஸ்" தெரிவித்தது. (உ-எ)

## கிளாலி சென்ற "யாழ்தேவி" ஆனையிறவுக்கே திரும்பியது

"கிளாலி சென்ற "யாழ்தேவி" ஆனையிறவு திரும்பியது" என்ற தலைப்பில் "யாழ்தேவி" இராணுவ நடவடிக்கை குறித்து தமிழ் வார இதழ் ஒன்று கடந்த ஞாயிறு செய்திக் கட்டுரை ஒன்றை வெளியிட்டது. அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

ஆனையிறவில் இருந்து சாவகச்சேரிக்கு புறப்பட்ட "யாழ்தேவி எக்ஸ்பிரஸ்" பயணத்தை இடைநடுவில் நிறுத்தி விட்டு மீண்டும் ஆனையிறவுக்கே திரும்பி விட்டது.

இந்த ஐந்து நாள் பயணத்தில் ஏற்பட்ட இழப்பு சிறிதாகாததற்கு இவ்வாறான பயணங்கள் தொடர்வதை நிறுத்தி வேறு வழிகளைத் தேட வைத்திருக்கிறது.

"யாழ் தேவி நடவடிக்கை இராணுவ வரலாற்றில் மற்றொரு வடுவை ஏற்படுத்தி விட்டது என்றே கூறவேண்டும்.

ஏனெனில் படையினர் தாம் திட்டமிட்ட இலக்கை அடைய முடியவுமில்லை. அடைந்த இலக்கை பாதுகாக்கவும் முடியவில்லை. அத்துடன் பெரும் எண்ணிக்கையிலான வீரர்கள் உயிரிழந்ததுடன் பல நூற்றுக்கணக்கான வீரர்கள் மரணங்களுக்கும் ஆளாகி உள்ளனர். நான்கு டாங்கிகள், இரண்டு கவச வாகனங்கள் ஆகியனவும் சேதமாகி உள்ளன.

கடந்த வருடம் ஆகஸ்டில் பலாலி, தெல்லிப்பழையில் "ஏர்த்குவேக்" நடவடிக்கையை ஆரம்பித்த படையினர்-இரண்டு வார கால யுத்தத்தின் பின்-பல இழப்புகளுக்கு மத்தியில் தமது பழைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வு ஒன்றுக்கு அரசு தயாராகும் அறிகுறி!

### 'சண்டே ஐலண்ட்' தகவல்

கொழும்பு, ஒக். 13

அண்மையில் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் தாம் வெற்றியீட்டியதாக இராணுவம் கூறுவதைத் தொடர்ந்து-அரசியல் தீர்வு ஒன்றுக்கு அரசு தயாராகி வரும் அறிகுறிகள் தென்படுவதாக "சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போது நடந்துவரும் யுத்தத்துக்கு அரசியல் தீர்வு காணும் முகமாக அரசாங்கத்தின் சார்பில் விபரங் கற்றித் தலைவர் டாக்டர் சரத் அமரதுங்கவும் ஜனாதிபதி சட்டத்தரணி டெஸ்மண்ட் பெர்னாண்டோவும் கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளை இரகசியமாகச் சந்தித்துப் பேசினார்கள் என்றும்—

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே விரைவில் நடக்கவிருக்கும் பேச்சுகளுக்கு முன்னோடியாகவே இந்த இரகசிய பேச்சுகள் இடம்பெற்றதாக அவதானிகள் கருதுவதாகவும் "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது.

கொமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள தற்காலிக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வெளிநாடு செல்லவிருக்கிறார் என்றும்—

அதற்கு முன்பதாக பிரதமர் தமிழ்க்கட்சிகளைச் சந்திப்பார் என்றும்—

இச்சந்திப்பின்போது அமைச்சர் தொண்டமானும் கலந்து கொள்வார் என்றும் கடந்த ஞாயிறு "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருந்தது.

இதற்கிடையில்—

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வாஷிங்டனில் இடம்பெறும் பேச்சுகளில் பங்குபற்றுவதற்காக கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

(உ-எ-3)

## ஐரோப்பிய எம்.பிக்கள் குழுவின் மத்தியஸ்த முயற்சி நிராகரிப்பு

இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்ய ஐரோப்பிய நாடாளுமன்றம் முன்வந்ததை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி நிராகரித்து விட்டது.

அண்மையில் கொழும்பு வந்த ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக்குழு ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்தித்தபோது இந்த மத்தியஸ்த யோசனையை முன்வைத்தது.

வெளியார் தலையீடு இன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருப்பதாக ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

"பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நாம் என்றும் தயாராக உள்ளோம். பேச்சுவார்த்தைக்கு வரும்படி விடுதலைப் புலிகளிடம் நாம் தூதுக்களை அனுப்பியிருக்கிறோம். அவர்கள் (விடுதலைப் புலிகள்) வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்சினைகளை கவனிக்க தமிழ் எம்.பிக்களைக் கூட அனுமதிக்கின்றார்கள் இல்லை".—இப்படி ஜனாதிபதி ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக்குழுவிடம் தெரிவித்ததாக "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது.

ஆனால்—

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் மத்தியஸ்த யோசனையை அரசு எதிர்க்கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் அபிப்பிராயப்படுகின்றன.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் மத்தியஸ்தம் இறுதியில் தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடும் என்றும் தமிழ்க் கட்சிகள் எண்ணுவதாக "சண்டே ஐலண்ட்" மேலும் தெரிவித்துள்ளது. (உ-எ-3)

முதலமைச்சர் பதவிப் பிரமாணத்தின் பின் கலவரம்

## காலியில் பொலீஸார் சூட்டில் இருவர் மரணம்; பலர் காயம்

### மாகாணசபை உறுப்பினர் மீதும் தாக்குதல்

கொழும்பு, ஒக். 13

தென்மாகாண சபையின் புதிய முதலமைச்சராக ஸ்ரீ.ல.சு.கவைச் சேர்ந்த அமரசிறி தொடங்கொட நேற்று முற்பகலில் பதவி ஏற்றார்.

அதன் பின்னர், முதலமைச்சரும், அவரது ஆதரவாளர்களும் செயலகத்திலிருந்து ஆளுநர் அலுவலகத்துக்கு [illegible].

கலவரத்தில் பொலீஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இருவர் மரணமானார்கள். ஒருவர் படுகாயமுற்றார். மற்றும் பலர் காயமடைந்தனர்.

அமரசிறி தொடங்கொட முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதற்கு ஆளுநர் பாக்கிர் மாக்கார் திடீரென்று விதித்த நிபந்தனையின் பிரகாரம்—

தொடங்கொட தமக்கு ஆதரவான 28 மாகாணசபை உறுப்பினர்களையும் நேற்றுக் கூட்டிச் சென்றிருந்தார். ஆனால் ஆளுநர் அலுவலகப் பொலீஸார் அவர்களை உள்ளே போகவிடாது தடுத்தனர்.

பதவிப் பிரமாணம் நடைபெறமாட்டாது என்று ஆளுநர் தமக்கு அறிவித்திருப்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யமஹா லாண்ட் மாஸ்டர் பெட்டியுடன் வெக்வோஸ் மோட்டார் சைக்கிள் 18HP 3000RPM Diter டீசல் என்ஜின் 7.0HP Petter டீசல் என்ஜின் விபரங்களுக்கு புறோமோட்டேஸ், 844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (27626)

Lohmann Brown சேவற் குஞ்சுகள் உடன்பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27634)

## சக்தி

"சக்தி" இயற்கைப் பசளை கூட்டெரு முறையில் தயாரிக்கப்படுவது. தோட்டப் பயிர்களுக்கு வளத்தைத் தருவது. குறைந்த விலை, நிறைந்த விளைச்சல் பக்கற் விலை ரூபா. 9/-, 25கிலோ சென்ட் பெட்டி ரூபா 200/- அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்கப்படுகிறது. "மில்க்வைற்" (இ/6216)

## வியாழமாற்றம்

13-10-93 வியாழ மாற்றம் 15-10-93 சனிக்கிர மாற்றம், 31-10-93 செவ்வாய் மாற்றம், ரூபா10/- எங்கும் கிடைக்கும். சோதிடம் 21/B, மணிக்கூட்டு, வீதி, யாழ்ப்பாணம், (ஜோதிடர் சதியா) (27621)

## இலவச திருமண சேவை

36, வயது, பரணி செவ்வாய்1 பாவம் 75, படித்த பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும் சகல மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலை, விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (27631)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு கிழமை வளர்ச்சியடைந்த சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக சிங்கம் வேன், உடுவில். (6687)

## தவறிவிட்டது

4-10-93 அன்று தா. செல்வதேவி, சி. யோகேஸ்வரன் ஆகியோரது பிறப்புப் பத்திரம் மற்றும் முக்கிய கடிதக் கோவைகள் சுன்னாகம் சந்தைக் கடையடியில் தவறவிடப்பட்டுள்ளன? கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வே. சிவபாதகுருக்கள், கண்ணகையம்மன் கோயிலடி, வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை விலாசத்திற் சேர்க்கவும். அல்லது அனுப்பவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (27628)

## ஆவே மரியா

சிலுவையில் இறுதிய இத்தனை செபப் புத்தகம், 15 காரணிக்கத்துடன் செபமாலைத் தியானம், புனித ஆரோக்கியமாதா நவநாள் புத்தகம், புனித அந்தோனியார் நவநாள் புத்தகம் விற்பனைக்குண்டு. புனித சித்தாத்திரை மாதா இல்லம், இல. 92, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (27632)

## திருத்தவேலைகளுக்கு

உங்கள் கடிகாரங்கள், ரேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிக்கா ரேடியோ அண்ட் வோச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (இ.6176)

## நூல்நிலையம் திறப்பு

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் பழைய மாணவன் சுட்டன் வேங்கைமாறன் நூல் நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் திரு. இளங்குமரன் நூல் நிலையத்தை திறந்து வைத்தார். (க-162)

---

இதோ வெளிவந்து வேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன

சிவம் இன்டஸ்றீஸாரின்

## நவீன தீபாவளி வாழ்த்து மடல்கள்

விலை விவரம்

| | | | |
|---|---|---|---|
| No. 1 | கட்டிங் காட் | 100க்கு | — 1,200-00 |
| No. 2 | போட் காட் 10x7 | " | — 1,000-00 |
| No. 3 | கட்டிங் காட் | " | — 750-00 |
| No. 5 | கட்டிங் காட் | " | — 650-00 |
| | பெரியபோஸ்காட் சினிமா | " | — 200.00 |
| | சுவாமி போஸ் காட் | " | — 110-00 |

சிறுவர் புத்தகங்கள்!

சித்திரத்தமிழ் மலர், சிறுவர் தமிழ் வாசகம் Essy A, B, C, நீதிக் கதைகள் I, II

தற்போதைய சூழ்நிலை காரணமாக எமது வெளியீடுகள் பின்வரும் இடங்களில் மொத்தமாக பெற்றுக் கொள்ளலாம்.

**மக்மிலன் புத்தகசாலை,**
இல. 3, பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீகாந் புத்தகசாலை,**
நல்லூர். 165, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(மொத்த பிரதிகளுக்கு நாடவேண்டிய இடம்)

(இ-6196)

---

# ஐ. நா. அமைதிப் படைக்கு ஸ்ரீலங்காப் பொலிஸார்!

## ராணுவத்தை அனுப்ப மறுப்பு

கொழும்பு, ஒக். 13

அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடும் தமது படைகளில் பங்குபற்ற இராணுவத் துருப்புகளைத் தந்துதவுமாறு ஐ. நா. சபை விடுத்த கோரிக்கையை அடுத்து—

பன்னிரண்டு பொலிஸ் அதிகாரிகளை அனுப்பி வைக்க ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருக்கிறது.

பொலிஸ் உயரதிகாரி கே. சந்துணராஜா இத்தகவலை வெளியிட்டார்.

ஐ. நா. அமைதிப் பணி நடவடிக்கையில் பங்குபற்ற தனது இராணுவத்தினரை அனுப்புவதற்கு ஸ்ரீலங்கா அரசு மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (டி-த)

---

# எமது வெளியீடுகள்

★ காட்சிக்கு காட்சி திகிலூட்டும் சம்பவம் நிறைந்தபடம் **ஆடி அமாவாசை**

★ **FIRE HAWK** (War Film)

★ **KILL ZONE** (War Film)

**சுப்பர் லோ வீடியோ ஓடியோ சென்ரர்**
198/5 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(இ/6228)

---

# விக்னா கல்வி நிலையம்

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## DAY CLASSES

**பிரிவு - I வினா-விடை வகுப்பு**
**பிரிவு - II மீட்டல் வகுப்பு**

புதிய அலகுகள் ஆரம்பம்:

**14-10-1993** வியாழன் 8 மணி

| | |
|---|---|
| பொருளியல் | — க. கலாகரன் |
| கணக்கியல் | — S. K பிரபாகரன் |
| வர்த்தகம் | — வரதன் |
| அளவையியல் | — A. பிரபாகரன் |

(இ-6193)

---

# புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

## பழைய மாணவர் ஒன்றுகூடலும் வருடாந்தப் பொதுக் கூட்டமும்

காலம்: 16-10-1993 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி

இடம்: வித்தியாலய மண்டபம்

பழைய மாணவர்கள் (தற்பொழுது கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தவிர்ந்த) அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.
யாழ்ப்பாணம். (இ-6185)

---

## தமிழ் - திரு. கணேசலிங்கம்

B. A. (Hons)

| | | |
|---|---|---|
| B. A. | பேராதனைப் பல்கலைக்கழகம் | 4-00 |
| B. A. Part II | யாழ். பல்கலைக்கழகம் | 5-00 |
| G.A.Q. | பேராதனைப் பல்கலைக்கழகம் | 5 00 |
| | யாழ். பல்கலைக்கழகம் | 6 00 |

**ஆரம்பம்: 16-10-1993** 4 00 மணி

**BECON கல்வி நிலையம்**
ஸ்ரீதர் முன்பாக, யாழ்ப்பாணம்.

(இ-6200)

---

# A SERVICE OF THANKSGIVING

For The Life of

**Kamala Sugunarajah**

Will be held
at the
C.S.I. CHURCH, UDUVIL
on
Thursday 14th October 1993
at 4.00 p.m.
All are Cordially Invited

— PRINCIPAL
Uduvil Girls' College.

(C/6402)

---

## அரசறிவியல் - திரு. கேதீஸ்

(B. A)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் / பேராதனைப் பல்கலைக்கழகம் **G.A.Q.**

**ஆரம்பம்: 16-10-1993**
3 00 p. m.

**BECON கல்வி நிலையம்**
ஸ்ரீதர் முன்பாக, யாழ்ப்பாணம்.

(இ/6198)

---

# இரண்டாம் வருட நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 13 |
| — | — |
| 03 | 10 |
| — | — |
| 1935 | 1991 |

திருமதி

## ஞானம்மா விக்ரர் இம்மானுவல்

என்றும் அன்புடன் நினைவுகூரும்

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை,
சகோதரர்,
மைத்துனர், மைத்துனி.

இல. 4, கோவில் வீதி ஒழுங்கை,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (27636)

---

# நன்றி நவிலல்

நயினாதீவில் 13-09-1993இல் காலஞ்சென்ற எங்கள் அன்புத் தந்தை

## திரு. கு. இராமச்சந்திரனின்

மரணச் செய்தி கேட்டு எமது மாமா வீட்டிற்கு வருகை தந்து எமக்கும் மாமா குடும்பத்தினருக்கும் அனுதாபம் தெரிவித்தும் ஆறுதல் கூறியும் சென்ற அனைத்து நயினாதீவு மக்களுக்கும் அரியாலையூர் மக்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
மனைவி - மகேஸ்வரியும்,
மக்கள் - பேரின்பநாதனும், சகோதரர்களும்,

891, கண்டி வீதி (நாவலர் சந்தி)
அரியாலை. (27630)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### எங்கிருந்தாலும் தமிழனே!

மாத்தளை மாவட்டத்தில் வசிக்கும் தமிழர்களும் இனி மேல் தங்களைப் பொலிஸில் பதிவுசெய்து கொள்ள வேண்டுமாம். மாத்தளை மாவட்டப் பொலிஸ் அதிபர் இதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்.

கொழும்பு நகரிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் வாழும் தமிழர்கள் தங்கள் பெயர்களைப் பொலிஸில் பதிய வேண்டும் என்பது நீண்ட நாள் விதி. அப்பகுதிகளில் வாழும் தமிழர்களுடன் புதிதாக உறவினர்கள், நண்பர்கள் எவரும் வந்து தங்கினால் அது குறித்துப் பொலிஸில் பதியவேண்டும்; அறிவிக்கவேண்டும்.

கொழும்புத் தலைநகரின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக, வேண்டத்தகாத சம்பவம் நடைபெறாமல் தடுப்பதற்காகவே இத்தகைய நடவடிக்கை என்று கூறப்படுகிறது. குறிப்பாக விடுதலைப் புலிகள் தலைநகருக்குள் ஊடுருவி அதன் பாதுகாப்புக்குப் பாதிப்பு உண்டாக்காமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்று பொலிஸ் மற்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுவது உண்டு.

இந்த ஒரு காரணத்தைக் கூறி கொழும்பு கோட்டைத் தொடக்கம் நீர்கொழும்பு வரையும் அடுத்த திசையில் கொள்ளுப்பிட்டி முதல்மொறட்டுவ வரையும் வாழும் தமிழ் மக்கள் வகை தொகையின்றி நாளாந்தம் கைது செய்யப்படுகின்றனர். பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர். சகல விதமான சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். பல சந்தர்ப்பங்களில் மிருகங்களைவிடக் கேவலமாகவும் நடத்தப்படுகின்றனர்.

அது மட்டுமன்றி, தமிழர்களைக் கைது செய்வதனை ஒரு வியாபாரமாக்கிப் பொலிஸாரும், படையினரும் பெரும் பணக்காரர் ஆகிறார்கள். கொழும்பு நகரில் பாதுகாப்பைப் பேணும் ஏற்பாடு தென்னிலங்கையில் புதிய பணக்காரர் குழாம் ஒன்றை உருவாக்கி வருகிறது! பணம் சம்பாதிப்பதற்கென்றே தலைநகரின் பாதுகாப்புக்கு ஆபத்து வரப்போவதாகச் செய்திகள் பரப்பப்படுகின்றன.

இத்தகைய பின்னணியில் மாத்தளை வாழ் தமிழர்களையும் பொலிஸில் பெயர் பதியுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதே போலத் தமிழர் வாழும் தென்னிலங்கைப் பிரதேசங்களில் எல்லாம் பொலிஸில் பெயர் பதியும் உத்தரவு பிறப்பிக்கப்படலாம், அதற்கான காரணத்தைக் காட்டுவது பொலிஸாருக்கு ஒன்றும் கடினமான அலுவலல்லவே!

போர் என்ற பெயரில் வடக்கு-கிழக்கு வாழ் தமிழர்கள் இம்சைப்படுத்தப்படுகின்றனர்; கொல்லப்படுகின்றனர். தெற்கிலோ, பாதுகாப்பைப் பேணுதல் என்ற பேரில் தமிழர்கள் இம்சிக்கப்படுகிறார்கள். தமிழர்கள் இந்த நாட்டில் எங்கிருந்தாலும் இரண்டாந்தரப் பிரசைகள்; அடிமைகளே என்ற நிலையிலே நடத்தப்படுகின்றனர்.

இதனைத் தான் தமிழர்களில் 40 சத விதமானோர் தெற்கில் சிங்களவர்களுடன் சேர்ந்து நிம்மதியாக நல்லுறவுடன் வாழ்கிறார்கள் என்று மாற்று அர்த்தம் கற்பித்தார் ஜனாதிபதி விஜேதுங்கா. அவர்களுக்குப் பிரச்சினை எதுவுமில்லை; அதனால் இனப்பிரச்சினை என்ற ஒன்றில்லை என்றும் கூறி முடித்தார்!

தமிழர்களை அடிமைகளாக நினைக்கிறார்கள் சிங்கள அரசியல்வாதிகள். ஆயின் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு இணக்கம் தெரிவிப்பர் என்று எதிர்பார்ப்பது எங்ஙனம்? ஒவ்வொரு தமிழனும் அவன் வடக்கில் வாழ்ந்தால் என்ன; தெற்கில் வாழ்ந்தால் என்ன; மலைநாட்டில் வாழ்ந்தால் என்ன இது குறித்து உள்ளிருக்க, ஊன்றிச் சிந்திக்க வேண்டும்.

### சிகிச்சை பெற்ற நோயாளர்

யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவில் கடந்த ஆகஸ்ட் மாதம் 27,341 நோயாளரும், வைத்தியசாலை விடுதியில் தங்கி 4,836 நோயாளரும் சிகிச்சை பெற்றனர். (சு-17)

## இன்று

வேலணைக் கொத்தணி மாணவர் அமைப்பின் 'கீதம்' கையெழுத்துப்பிரதி வெளியீட்டு விழா இன்று புதன் பிற்பகல் 3 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும். (த)

o o o

யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசத்தில் அங்கம் வகிக்கும் நிர்வாகிகள் மற்றும் தலைவர், செயலாளர் ஆகியோர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். (த)

o o o

யாழ் புனித நோக்கோமஸ் கத்தோலிக்க வித்தியாலயத்தில் கடந்த 5 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு. யே. யேசுதாசனுக்கு இன்று காலை 9 மணிக்கு மேற்படி வித்தியாலயத்தில் பிரிவுபசார விழா நடத்தப்படும். (த-80)

## சிராவஸ்திக்கு முன் கிடந்த தோல் பையால் பரபரப்பு

கொழும்பு, ஒக். 13

எம். பிக்களின் விடுதியான சிராவஸ்திக்கு முன்னால் கவனிப்பாரற்ற நிலையில் கடந்த சனியன்று நண்பகல் அனாதரவாகக் காணப்பட்ட தோல் பை ஒன்று பெரும் குண்டுப் பரபரப்பை ஏற்படுத்தியது.

உஷாரடைந்த சிராவஸ்தி பொலிஸார் கறுவாத்தோட்டப் பொலிஸாருக்கு இதுபற்றி அறிவித்தனர்.

குண்டுப் பரிசோதனை இராணுவப் பிரிவினர் சகிதம் அவசர அவசரமாக அங்கு வந்த பொலிஸார் மேற்படி பையை வெடிக்க வைத்தனர். ஆனால் அதற்குள் பழைய உடுப்புகளே காணப்பட்டன. (உ-8)

## 'யாழ்தேவி' நடவடிக்கையில் உயிரிழந்த அதிகாரிகள்

கொழும்பு, ஒக். 13

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்ட படையினரில் ஒரு கப்டன், நான்கு லெப்டினன்ட்கள், இரண்டு 2 ஆம் தர லெப்டினன்ட்கள் அடங்குகின்றனர்.

காயமடைந்த படையினரில் ஒரு மேஜர், ஒரு மேஜர், ஏழு கப்டன்கள், மூன்று லெப்டினன்ட்கள் இரண்டாந்தர லெப்டினன்ட்கள் இருவர் அடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மூன்றாவது, ஆறாவது, ஏழாவது காலாட் படையணிகள், முதலாவது சிங்க படையணி, ஏழாவது சிங்க படையணி, ஆறாவது கெமுனு வாட்ச் அணி ஆகியன யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் பங்கு பற்றின என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## விக்டர் நினைவு அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

மன்னார் மாவட்டத் தளபதியும் மத்திய குழு உறுப்பினருமான லெப்டினன்ட் கேர்ணல் விக்டர் ஒஸ்காரின் ஏழாம் ஆண்டு நினைவு தினம் மன்னார் உட்பட பல்வேறு இடங்களில் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு தாக்குதல்களை தலைமையேற்று நடத்திய விக்டர், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருநெல்வேலி கண்ணி வெடித் தாக்குதலிலும் பங்கேற்றிருந்தார். (உ-த)

## அதிபர்கள் கூட்டம்

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன் முற்பகல் 11 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (த)

## சிற்றூழியர் பதவியுயர்வு பரீட்சை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 13

இம்மாதம் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிருந்த சிற்றூழியர்களை பதவி உயர்த்துவதற்கான பரீட்சை யாழ்ப்பாணத்தில் அதே திகதிகளில் நடைபெறவுள்ளது.

இத்தகவலை கொழும்பில் இருந்து யாழ். அரச அதிபர் யாழ் செயலகத்துக்கு அனுப்பியுள்ளார்.

இதேவேளை — இலங்கை நிர்வாக சேவை இரண்டாம் வகுப்புக்கான பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என்றும் —

யாழ். இந்துக்கல்லூரி நிலையத்தில் தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கான இறுதிப் பயிற்சி நெறியை பயிலுபவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்றும் யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (த-5)

## மட்டக்களப்பு வர்த்தகர்கள்

## கடைகளுக்கு பொருள்கள் வாங்கவும் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் மீதான இராணுவக் கட்டுப்பாடுகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு வர்த்தகர்கள் தற்போது தமது கடைகளுக்கான பொருள்களைக் கொள்வனவு செய்ய பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் குணரத்தின கட்டுப்பாடு விதித்துள்ளார்.

கடைக்கான பொருள் பட்டியலை உரிமையாளர் எடுத்து வந்து, இராணுவ முகாம் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் —

பொறுப்பதிகாரியே கடைக்கு வழங்க வேண்டிய பொருள்களின் அளவு குறித்துத் தீர்மானிப்பார் என்றும் —

பொறுப்பதிகாரியால் சிபார்சு செய்யப்பட்ட அளவு பொருள்களே மட்டக்களப்பு நகரில் உள்ள விற்பனை நிலையங்களால் கடைகளுக்கு வழங்கப்படும் என்றும் —

அங்கிருந்து பொருள்கள் எடுத்துச் செல்லப்படும் வழியில் பொருள் பட்டியலின்படி இராணுவத்தினர் அவற்றைப் பரிசோதிப்பர் என்றும் புதிய கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

## புதிய தலைவர்

கொழும்பு, ஒக். 13

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் புதிய தலைவராக பேராசிரியர் பி. எச். பண்டிதரத்னவும், உப தலைவராக பேராசிரியர் ஐ. பாலசூரியாவும் நியமிக்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. (உ-த)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் 9 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 30 மணிமுதல் கலைவாணி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விபரம் வருமாறு:-

★ குருநகர் சென், றொக்ஸ் சனசமூக நிலைய அணி எதிர் யாழ் இறீன் பீக்ஸ் சனசமூக நிலைய அணி.

★ குருநகர் தொடர்மாடி சனசமூக நிலைய அணி எதிர் குருநகர் றெக்ஸிமஷில் சன சமூக நிலைய அணி.

o o o

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உதைபந்தாட்டப் போட்டிகள் இன்றும், நாளையும், பிற்பகல் 3 30 மணிமுதல் குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டத்தில் மோதும் அணிகள் வருமாறு:-

★ பற் ஹென்றிஸ் எதிர் பாடும் மீன் வி. க. "ஏ"

★ சென். நீக்கிலாஸ் எதிர் பாடும் மீன் வி. க. "பி"

நாளைய ஆட்டத்தில் மோதும் அணிகள் வருமாறு:-

★ பாடும் மீன் எதிர் அரியாலை ஐ. வி. க. "பி"

★ பாடும் மீன் எதிர் சென். அன்ரனீஸ் வி. க. "ஏ"

o o o

(த)

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். 15, 17, 19 வயதுக்குட்பட்ட அணிகள் இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும்.

## தரை நிலைவரம் வாய்ப்பில்லை

## தளம் அமைக்க முடியாததால் இளாலியிலிருந்து வாபஸ்!

### இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 13

நிரந்தர இராணுவ தளம் ஒன்றை நிறுவ தரை நிலைவரம் அனுமதிக்காத காரணத்தினால் தான் கைப்பற்றப்பட்ட இளாலியில் இருந்து இராணுவம் வெளியேறியது.

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினா "சண்டே ஐலண்ட்" வார இதழுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

"யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையின் நோக்கம், விடுதலைப்புலிகளுக்கு உள்ள வசதிகளை அழித்துவிட்டு படையினர் முகாமுக்கு திரும்புவது தான் — என்றும் அவர் கூறினார். (உ-எ)

## பல்கலைக்கழக அனுமதி:

## யாழ் குடாநாட்டிலிருந்து இந்த முறை மூன்றில் ஒரு பங்கினருக்கே அனுமதி

### பாதிக்கப்பட்ட மாணவர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 13

1992 – 93 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதியின்போது முந்திய கல்வி ஆண்டில் அனுமதி பெற்ற மாணவர்களை விட மூன்றில் ஒருகுதி மாணவர்களே யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்த வெட்டுப்புள்ளிகளினால் யாழ். மாணவருக்குக் கிடைக்க வேண்டிய இடங்கள் வெளிமாவட்ட மாணவருக்குப் போய்ச் சேரவுள்ளது.

—இவ்வாறு புதிய வெட்டுப் புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் அமைப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை விவரம் வருமாறு:

அண்மையில் 1992–93 பல்கலைக்கழகக் கல்வியாண்டுக்கான வெட்டுப்புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன. கொழும்பு, யாழ்ப்பாண வெட்டுப்புள்ளிகளை ஒப்பிட்டு நோக்குகையில் எல்லாத் துறைகளிற்குமான வெட்டுப் புள்ளிகளும் யாழ்ப்பாணத்தை விட கொழும்பில் உயர்வாக உள்ளதால் யாழ். மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளிகள் குறைக்கப்பட்டுள்ளன என்ற போலித் தோற்றத்தையும் இதனால் வழக்கமான எண்ணிக்கையில் யாழ். மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவார்கள் என்ற எண்ணத்தை பலரிடையே ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் உண்மை நிலையை நோக்குமிடத்து சென்ற ஆண்டு அனுமதி பெற்ற மாணவர்களில் அண்ணளவாக மூன்றிலொரு பங்கு மாணவர்களே இம்முறை அனுமதி பெறுவார்கள்.

இதற்குப் போர் நிலையால் வடபகுதி மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று ஒரே கருத்தாகக் கூறமுடியாது. 1992 ஏப்பிரல் விசேட பரீட்சையில் தோற்றிய அதே மாணவர்கள் 1992 ஆகஸ்டில் குறுகிய கால இடைவெளியில் நடைபெற்ற பொதுப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர்.

1991 ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சை 1991 ஆகஸ்டிலும் 1992 ஏப்பிரலிலும் வெவ்வேறாக நடத்தப்பட்டது. இதில் வடபகுதி மாணவர்கள் தோற்றிய 1992 ஏப்பிரல் விசேட பரீட்சையில் எல்லாப் பாடங்களிற்குமான வினாக்களும் அதற்கான புள்ளி வழங்கல் திட்டமும் 1991 ஆகஸ்டில் நடைபெற்ற பரீட்சையினிலும் மிகவும் கடுமையான முறையில் அமைந்திருந்தன. இதன் காரணமாக விசேட பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் பெரும் வீழ்ச்சி அடைந்தன அப்படியிருந்தும் 1992/93 இற்கான பல்கலைக்கழக அனுமதி வழங்கலில் இரு வேறுபட்ட தரப்பரீட்சைகளும் ஒன்றாகவே கருதப்பட்டன.

விசேட பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் புள்ளிகள் பரீட்சையின் கடுமைகாரணமாக மிகவும் குறைவாக இருந்ததனால் இரு பரீட்சைகளும் ஒன்றாகக் கருதப்பட்டு திறமை அடிப்படையான தெரிவில் (Merit Quota) ஒவ்வொரு துறையிலும் வட [illegible] இடம் பெறாத அல்லது ஒரு [illegible]

இடம் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனாலேயே தெரிவான மாணவர்களின் மொத்த எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

ஏனைய மாகாண மாணவருக்கு

வடபகுதி மாணவர்கள் இம்முறை இழந்த இடங்கள் வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் 1991 ஆகஸ்ட் பொதுப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு சாதகமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 1992–93 இல் ஏற்பட்ட இழப்பு எதிர்வரும் சில கல்வியாண்டுகளிலும் மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இனிமேல் விசேட பரீட்சை நடத்தப்படமாட்டாது என்று இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் முன்பு கூறியுள்ள போதிலும் வடபகுதி மாணவர்கள் இம்முறை இழந்த பெரும் எண்ணிக்கை இடங்களை தென்பகுதி மாணவர்கள் பெற்றிருப்பதால் இனியும் இவ்வாறான விசேட பரீட்சை நடத்தப்பட்டு இதே போன்றதொரு இக்கட்டான நிலை ஏற்படாது என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

இந்த இக்கட்டான நிலையிலிருந்து மீள்வதற்கு எம்மிடையே உள்ள கல்விமான்கள், நலன் விரும்பிகள் அனைவரும் முன்வந்து ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

மரமதனை அழிப்பதால்
மண் வளத்தை அழிக்கின்றீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

